**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், குளித்தலை**

**அசல் வழக்கு எண் 91/2022**

**வாதி தரப்பு சாட்சி-1 ஜோதிமணி திருமதி.ஏ.பிரேமா பெஞ்ச் கி**ளார்க் அவர்களால் 44/1969 வது பிரிவின் கீழ் பிரமாணம் செய்யப்பட்டு 20.03.2025 ம் தேதியில் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

**வாதி தரப்பில் முதல்விசாரணை தொடர்ச்சி**

1) 24.04.2017 ம் தேதியிட்ட இராசம்மாள் இறப்புச்சான்றிதழ் உண்மை நகல் **வா.சா.ஆ.4** ஆகும்.

**தாவாப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.**

**பிரதிவாதிகள் தரப்பில் குறுக்குவிசாரணை**

1) எனக்கு எழுதப்படிக்க தெரியுமா என்றால் தெரியாது. தாவா சொத்து எனக்கு எவ்வாறு பாத்தியம் என்றால் என் தாயார் வகையில் பாத்தியமாகும். பழனியாண்டிமூப்பன் என் பாட்டனார். தங்காள் என்பவர் என் பாட்டி. பழனியாண்டிமூப்பன் 11.02.1962 ம் ஆண்டு குளித்தலை சார்பதிவாளர் அலுவலகத்தில் ஆவண எண்.3947/1962 பெற்ற கிரைய ஆவணத்தை தாக்கல் செய்யவில்லை என்றால் அதுபற்றி தெரியாது. தங்காள் 08.11.1938 ம் ஆண்டு குளித்தலை சார்பதிவாளர் அலுவலகத்தில் ஆவண எண்.3501/1938 ல் பெற்ற கிரைய ஆவணத்தை தாக்கல் செய்யவில்லை என்றால் அதுபற்றி தெரியாது. தங்காள் 01.11.1937 ம் ஆண்டு குளித்தலை சார்பதிவாளர் அலுவலகத்தில் ஆவண எண்.3633/1937 ல் பெற்ற கிரைய ஆவணத்தை தாக்கல் செய்யவில்லை என்றால் அதுபற்றி தெரியாது. மேற்படி கிரைய ஆவணங்கள் குறித்து வா.சா.ஆ-1 ஆவணத்தில் குறிப்பிட்டு சொல்லப்பட்டுள்ள நிலையில் மேற்படி கிரையங்கள் யாரிடமிருந்து எவ்வளவு நிலம் கிரையம் பெறப்பட்டது என்பது பற்றி வா.சா.ஆ-1 ஆவணத்தில் சொல்லவில்லை என்றால் அதுபற்றி தெரியாது.

2) பழனியாண்டிமூப்பன் மகன் தான் முருகன் என் தகப்பனார் என்றால் சரிதான். என் தகப்பனாருக்கு பாலசுப்பிரமணி(எ) தங்கையன், எழிலரசி மற்றும் நான் வாரிசு என்றால் சரிதான். தாவா சொத்து பழனியாண்டி மூப்பனுக்கு பூர்வீக சொத்து என்றால் என் தகப்பனாருக்கும் தாயாருக்கும் பாத்தியப்பட்டது. தாவா சொத்து என் தகப்பனரால் கிரையம் பெறப்பட்ட சொத்து அல்ல என்றால் அதுபற்றி தெரியவில்லை. தாவா சொத்து என் தாயாரால் கிரையம் பெறப்பட்ட சொத்து அல்ல என்றால் என் தாத்தா வாங்கிக்கொடுத்தார். தாவா சொத்து என் தாயாருக்கு பூர்வீக சொத்து அல்ல

என்றால் அதுபற்றி தெரியாது. தாவா சொத்து என் தாயாருக்கு அவரது தாய் தந்தை வழியில் வந்த சொத்து அல்ல என்றால் அதுபற்றி தெரியாது. என் தாயார் இராசம்மாள் அவரது சுய சம்பாத்திய சொத்தை மட்டும்தான் உயில் எழுதவோ, விற்பனை செய்யவோ, அடமானம் வைக்கவோ முடியும் என்றும், பூர்வீக சொத்தை வில்லங்கப்படுத்த முடியாது என்றால் சரியல்ல.

3) என் தந்தை உயிருடன் இருந்த சமயத்தில் தாவா சொத்தை பொறுத்து நாங்கள் பாகம் பிரிக்கவில்லை என்றால் சரிதான். சொல்லிவிட்டு போனார். தாவா சொத்து என் தகப்பனார் உயிருடன் இருந்த காலம் வரை கூட்டாக அனுபவம் செய்து வந்தோம் என்றால் சரிதான். தாவா சொத்தின் முழு உரிமையும் பாலசுப்பிரமணியன்(எ)தங்கையன் தான் அனுபவம் செய்து வந்தார் என்றால் சரியல்ல. நானும், என் தாயாரும் தான் அனுபவம் செய்து வந்தோம். எனக்கு எந்த வருடம் திருமணமானது என்றால் அதுபற்றி தெரியாது. எனது திருமணத்தின்போது எனக்கு அனைத்து சீர்வரிசைகளும் செய்தார்கள் என்றால் என் பெற்றோர்கள் செய்தார்கள். என் தகப்பனார் இறந்த பின்னிட்டுதான் எனது திருமணம் நடந்தது. 25.03.1989 ம் தேதிக்கு முன்பே எனக்கு திருமணம் நடந்துவிட்டது என்றால் அதுபற்றி தெரியாது. தாவா சொத்தில் எனக்கு எவ்வித உரிமையும் பாத்தியமும் இல்லை என்றால் சரியல்ல.

4) தாவா சொத்து என் மூதாதையர் சம்பாதித்த சொத்து என்றால் சரியல்ல. தாவா சொத்து 11.12.2013 ம் ஆண்டுமுதல் தற்போதுவரையில் வருவாய்த்துறை ஆவணங்கள் பாலசுப்பிரமணியன் பெயரில் இருந்தது என்றால் சரியல்ல. வா.சா.ஆ-1 ஆவணத்தில் தாவா சொத்தை இராசம்மாள் தன்னுடைய சொத்து என சொல்லியுள்ளார் என்றால் சரிதான். என் தாயார் இராசம்மாள் கையெழுத்துப் போடுவாரா என்றால் போடுவார். பின்னிட்டு வயோதிகம் காரணமாக கைரேகை வைத்துள்ளார். வா.சா.ஆ.1 ஆவணத்தில் குறிப்பிட்டுள்ள 3 அயிட்ட சொத்துக்களில் 5 செண்ட் என்பது எந்த சர்வே எண்ணில் என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1 ஆவணம் எங்கு எழுதப்பட்டது என்றால் குளித்தலையில் எழுதப்பட்டது. வா.சா.ஆ.1 ஆவணம் எழுதும்போது யார்யார் உடன் இருந்தோம் என்றால் எனது அக்கா எழிலரசி மற்றும் நான் இருந்தேன். வேறு யாரும் இல்லை. உறவினர்கள் இருந்தார்களா என்றால் ஞாபகம் இல்லை. உயில் இவ்வாறு தான் எழுதவேண்டுமென யார் சொன்னார்கள் என்றால் என் தாயார் தான் சொன்னார்.

5) தாவா சொத்தின் நான்கெல்லை என்னவென்றால் கிழக்கில் செந்தில் நிலம், மேற்கே தங்கவேல், வடக்கே தற்போது விற்றுள்ளார்கள்., யார் வாங்கியிருக்கிறார்கள் என தெரியவில்லை. தெற்கே வாய்க்கால் கரை உள்ளது. தாவா சொத்தில் நான் அனுபவத்தில் இல்லை என்றும், அனுபவத்தில் இருந்தால் நான்கெல்லைகளை சரியாக சொல்லியிருப்பேன் என்றால் சரியல்ல. பட்டா மாறுதல் செய்ய விண்ணப்பம் கொடுத்தேனா என்றால் நகராட்சியில் கொடுத்தேன். மேற்படி மனுவை இவ்வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். உட்பிரிவு செய்ய கட்டணம் செலுத்தினேனா என்றால் ஞாபகமில்லை. தாவா சொத்தை நில அளவையர் மற்றும் கிராம நிர்வாக அலுவலர் அளவீடு செய்தனரா என்றால் செய்தார்கள். அப்போது யார் யார் உடன் இருந்தனர் என்றால் நான் மட்டும்தான் இருந்தேன். அளவீடு செய்தபோது உட்பிரிவு செய்து என்னிடம் கையெழுத்து வாங்கினார்களா என்றால் ஞாபகமில்லை.

6) நில அளவையர் அளவீடு செய்ய வந்தபோது அருகே உள்ள நிலத்துக்காரர்களுக்கு கூட்டுப்பட்டாதாரர்களுக்கும் தகவல் சொன்னேனா என்றால் சொல்லவில்லை. நிலத்தை அளவீடு செய்தபோது வாரிசுதாரர்கள், கூட்டுப்பட்டாதாரர்கள் யாரெனும் ஆட்சேபணை செய்தார்களா என்றால் இல்லை. தாவா சொத்தை சர்வேயர் அளவீடு செய்யவில்லை என்றும், நான் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. என்னிடம் காட்டப்படுவது தாவா சொத்திற்கான கூட்டுப்பட்டா என்றால் ஆமாம். சாட்சி மீண்டும் அதுபற்றி எனக்கு தெரியாது என கூறுகிறார். தாவா சொத்து நகராட்சியில் இருந்து மாநகராட்சியாக மாற்றப்பட்டபோது எங்களுக்கு ஏதேனும் அறிவிப்பு வந்ததா என்றால் அதுபற்றி தெரியாது. மேற்படி அறிவிப்பு தங்கையன்(எ) பாலசுப்பிரமணிக்கு 1.53 ஏக்கர் நிலத்திற்கு அனுப்பப்பட்டது என்றால் அதுபற்றி தெரியாது. தாவா சொத்தை நான் அனுபவம் செய்து வந்திருந்தால் மேற்படி அறிவிப்பு எங்களுக்கு வந்திருக்கும் என்றால் நாங்கள் தான் அனுபவம் செய்து வருகிறோம்.

7) தாவா சொத்தில் பிரதிவாதிகள் தான் வாழை சாகுபடி செய்துள்ளனர் என்றால் சரியல்ல. தாவா சொத்தை நான்தான் அனுபவம் செய்துவருகிறேன் என்பதற்கான ஆவணம் எதுவும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் ஆவணம் வாங்கவிடாமல் தடுக்கின்றனர். காவல்நிலையத்தில் கொடுத்த புகார் மனுவை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.3 புகார் மனு ரசீதில் பிரதிவாதிகள் தான் வாழை சாகுபடி செய்துள்ளதாக கண்டுள்ளது என்றால் சரியல்ல.

**என் தாயார் இராசம்மாள் எவ்வாறு இறந்தார் என்றால் இயற்கையாக இறந்தார். நானும், எழிலரசியும் சேர்ந்து என் தாயாரிடம் முதியோர் ஓய்வூதிய தொகையை கேட்டு அவரை அடித்து துன்புறுத்தினோம் என்றால் சரியல்ல. என் தாயாரை நான் தள்ளிவிட்டு அவரது பின் தலையில் அடிபட்டு இறந்தார் என்றால் சரியல்ல. என் தாயார் இராசம்மாளுக்கு ஈமச்சடங்குகள் யார் செய்தது என்றால் தங்கையன்(எ) பாலசுப்பிரமணியன் செய்தார். நாங்கள்தான் பணம் கொடுத்தோம். நான் என் தாயாரின் இறப்புக்காரியத்திற்கே வரவில்லை என்றால் சரியல்ல.**

**வேண்டுக்கோளுக்கிணங்க குறுக்குவிசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.**

Taken down by me in open court read over interpreted in the witness and acknowledged by him /her to be correct.

Sd/-R.தமிழரசி

**Principal District Munsif,**

**Kulithalai.**